## வித்துவான். சுந்தர. சண்முகனாரின்
## வெளியீடுகள் :

1. விடும் விளக்கும்—விலை ரூபா 1.

பிற மொழியின் துணை வேண்டாத இனிய எளிய தூய தனித் தமிழ் நடையில், சங்க நூற் கதைகள் முதலியவற்றால், பெண்ணின் பெருமையினையும் பிள்ளைகள் கடமையினையும் ஆசிரியர் விளக்கியுள்ளார். இது திருமணத்தில் அன்பளிப்பாக வாங்கி வழங்குதற் கேற்ற வாழ்க்கை ஒவியம்! பெண்ணின் பெருமையின் பிழம்பு!

2. தனித்தமிழ்க் கிளர்ச்சி—விலை அணா 5.

மூன்று பெண்மணிகள் கூடி அம்மானை ஆட்டம் ஆடிப் பாடிக்கொண்டே, தனித் தமிழ்க் கிளர்ச்சி செய்வதாக அமைந்துள்ளது இந்நூல். இது புரட்சி வீரர்களுக்கு ஒரு புது விருந்து!

3. காந்தியின் நாகரிகம்—விலை அணா 1.

(காந்தியடிகளின் நாகரிகத்தை விளக்குவது)

4. திருக்குறள் தெளிவுரை—1. விலை அணா 4.

5. திருக்குறள் தெளிவுரை—2. ,, அணா 5.

6. ஆத்திசூடி அமிழ்தம்— ,, அணா 5.

7. குழந்தைப் பாட்டு— ,, அணா 3.

விற்பனையாளர்க்குத் தக்க கழிவு உண்டு.

கிடைக்குமிடம்:

வைந்தமிழ்ப் பதிப்பகம்

61—பி, வைசியர் தெரு, புதுச்சேரி.

புகைவண்டி நிலையப் (ரயில்வே புக்ஸ்டால்) புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

ஸ்ரீ அரவிந்தாசிரம அச்சகம், புதுச்சேரி. W. D. 568/48/1000

~~312~~ 136

# குழந்தைப் பாட்டு



ஆசிரியர் :
வித்துவான். சுந்தர. சண்முகனார்.

வைந்தமிழ்ப் பதிப்பகம், புதுச்சேரி.

## பதிப்புரை :

“குழந்தைப் பாட்டு” என்னும் இந்நூலை, எங்கள் ஏழாவது வெளியீட்டின் இரண்டாம் பதிப்பாக வெளியிடுகின்றோம். இந்நூற்குப் போதிய ஆதரவு அளிக்கும்படி அனைவரையும் வேண்டுகின்றோம்.

எங்களுக்கு நல்ல முறையில் அச்சிட்டுத் தரும் ஸ்ரீ அரவிந்த ஆசிரம அச்சகத்தாருக்கு நன்றியும், வணக்கமும் செலுத்துகின்றோம்.

பைந்தமிழ்ப் பதிப்பகம்,
புதுச்சேரி
1—11—48

இங்ஙனம்,
சிங்கார. குமரேசன்.


முதல் பதிப்பு ... ... ... ... 4-10-48
இரண்டாம் பதிப்பு ... ... ... ... 1-11-48


உரிமை யாவும் பைந்தமிழ்ப் பதிப்பகத்திற்கே.

ஏழாவது வெளியீடு —விலை அணா 3.

# குழந்தைப் பாட்டு

### சிறுவர் செய்யுள் மலர்

( ஆரம்பச் சிறு வகுப்புக்களுக் குரியது. )


ஆசிரியர் :
மயிலம் தமிழ்க் கல்லூரியில் விரிவுரையாளராயிருந்த
**வித்துவான். சுந்தர. சண்முகனார்.**





பைந்தமிழ்ப் பதிப்பகம்,
61—B, வைசியர் தெரு,
புதுச்சேரி.

## முன்னுரை:

சிறு பிள்ளைகளைக் குழந்தைகள் என்று சொல்வது வழக்கம். அக்குழந்தைச் சிறுவருக்கு ஏற்றபாட்டுக்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் காரணத்தால், இந்நூல் "குழந்தைப் பாட்டு" என்னும் பெயர் பெற்றது. சிறு பிள்ளையை நோக்கி, ஒரு பாட்டி சொல்வதாக இப்பாட்டுக்களை அமைத்துக் கொள்ளலாம்.

இந்நூல் இரண்டு பகுதியாகப் பிரிக்கப்பட் டுள்ளது. முதல் பகுதியில், கடவுள், தாய் தந்தையர், தின்பண்டம், விளையாட்டு, எறும்பு என்னும் ஐந்து பொருள்களைப் பற்றி நந்நான்கு பாட்டுக்கள் பாடப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியில், கல்வி, மெய், நன்னடக்கை, சுத்தம், தொண்டு என்னும் ஐந்து பொருள்களைப்பற்றி நந்நான்கு பாட்டுக்கள் பாடப்பட்டுள்ளன. எனவே, இரண்டு பகுதியிலும், பத்துப் பொருள்களைப்பற்றிய நாற்பது பாட்டுக்களைக் காணலாம். பாட்டுக்களுக்கு மெட்டுக்களும் கொடுக்கப்பட் டுள்ளன. சிறுவருக்குப் புரிய வேண்டும் என்னும் நோக்கத்தால், உலக வழக்கில் உள்ள பிறமொழிச் சொற்களையும் கலக்க நேர்ந்தது.

ஆனால், இந்நூல் புதியன புகுதல் என்னும் இலக்கண விதியின்கீழ் அடங்குமாதலின், இந்நூலைப் பழைய யாப்பிலக்கண விதிகளோடு பொருத்திப்பார்த்து இடர்ப்படுவது அவ்வளவு பொருத்த மன்று என்று தோன்றுகிறது. மேலும், மெட்டுக்கு ஏற்றபடி இசையை இசைத்துக்கொள்வது நல்லது.

இந்நூலை ஆதரித் தருளும்படி அரசியலாரையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் வேண்டுகிறேன்.

எனக்குப் பலவகையிலும் பேராதரவு புரிந்து வரும் என் பாட்டனராகிய, புதுவை உயர் திரு, சவுளி. அ. சிங்கார முதலியார் அவர்களின் பொன்னடிகட்கு இந்நூலைப் படைக்கின்றேன்.

பைந்தமிழ்ப் பதிப்பகம்,
புதுச்சேரி
1—11—1948

இங்ஙனம்,
சுந்தர. சண்முகன்.

# குழந்தைப் பாட்டு

## முதல் பகுதி

### 1. கடவுள்

*"வள்ளி கணவன் பேரை" என்ற கிளிக்கண்ணிமெட்டு*

1. காலையி லே எழுவாய் கடவுளை நீ தொழுவாய்
மாலையில் விளையாடியே—குழந்தாய் !
மகிழ்ச்சியாய்ப் பாடிடுவாய்

நல்ல சிறுவருக்கே நன்மை செய்வார் கடவுள்
பொல்லாச் சிறுவரிடம்—குழந்தாய் !
போகவே மாட்டார் அவர்

கையால்கும் பிட்டால் மட்டும் கடவுட்குப் போதாது
மெய்யாய் நடப்பதையே—குழந்தாய் !
மேலாகக் கொண்டருள்வார்.

* * *     * * *

2. எங்கும் உள்ளார் கடவுள், இங்கேஇல் லை என்று
மங்கிய காரியத்தைக்—குழந்தாய் !
மறைவாகச் செய்திடாதே

எல்லாம் அறிவார் அவர், இதனை அறியார் என்று
பொல்லாத காரியத்தைக்—குழந்தாய் !
புரிந்துநீ கெட்டிடாதே

ஏதும் மறவார் அவர், இதனை மறப்பார் என்று
தீதான காரியத்தைக்—குழந்தாய் !
தெரியாமல் செய்திடாதே.

* * *     * * *

3. கடவுளை நீநம்பினால் கைவிட வே மாட்டார்
திடமாக நம்பிடுவாய்—குழந்தாய் !
தினந்தோறும் கும்பிடுவாய்

கும்பிடுகிறேன் என்று கொஞ்சமும் நெஞ்சினிலே
அன்பின்றிக் கும்பிடினோ—குழந்தாய் !
அதைஅவர் ஏற்கமாட்டார்

உள்ளத்திலே எங்குமுண்மை அன்புங்கொண்டு
கள்ளங் கபடின்றியே—குழந்தாய் !
கடவுளைக் கும்பிடுவாய்.

***  ***

4. கோயிலுக்கு நீசென்றால் குறும்புகள் செய்யாமலே
வாயினால் நல்ல பாட்டைக்—குழந்தாய் !
வணங்கியே பாடிடுவாய்

கடவுளைத் தொழும்போது கருத்தினை வேறெங்குமே
விடுவது கூடாதுதான்—குழந்தாய் !
விட்டால் அவர் வெறுப்பார்

நல்ல பிள்ளையாக நான்ஆக வேண்டுமென்றும்
கல்வி வேண்டுமென்றும்—குழந்தாய் !
கடவுளை வேண்டிடுவாய்.

---

## 2. தாய் தந்தையர்

*“சொல்லு பாப்பா சொல்லு பாப்பா” என்ற மெட்டு*

1. தாயை வணங்கு ! தாயை வணங்கு !
தாங்கியே பெற்றுக் காக்கும்—தாயை வணங்கு !

நோயைக் கண்டால் மனம் நொந்து வாடி
நோகாமல் பாதுகாக்கும்—தாயை வணங்கு !

தூய குழந்தாய் ! தூய குழந்தாய் !
துன்பங்கள் போக்குகின்ற—தாயை வணங்கு !

ஈயெறும்பு தீண்டாமல் இருந்து கொஞ்சி
இனிய தின்பண்டம் தரும்—தாயை வணங்கு !

***  ***



2. தந்தை சொற் கேள் ! தந்தைசொற் கேள் !
தயவுடன் படிக்க வைக்கும்—தந்தைசொற் கேள் !

சிந்தையிலே உனக்குச் சிறந்த எண்ணம்
சேரும் வண்ணம் செய்யும்—தந்தைசொற் கேள் !

சொந்தப் பிள்ளாய் ! சொந்தப் பிள்ளாய் !
சோராமல் வீரம் ஊட்டும்—தந்தைசொற் கேள் !

எந்த இடத்திலும் நீ முந்தி நிற்க
ஏற்பாடு செய்துவரும்—தந்தை சொற் கேள் !

***  ***

3. வேலை செய்வாய் ! வேலை செய்வாய் !
விரும்பிஉன் பெற்றோர் இடும்—வேலை செய்வாய் !

காலையில் வீட்டில்ஒரு வேலை யிட்டால்
கசப்பின்றி நீ அந்த—வேலை செய்வாய் !

மாலை யில்அவர் கடைக் கனுப்பின்
மறுக்காமல் போய் அந்த—வேலை செய்வாய் !

மேலான பிள்ளை யென்றே எல்லோரும்
மெச்சத் தாய் தந்தையர்க்கு—வேலை செய்வாய் !

***  ***

4. பெற்றோர்களைப் *பேண் ! பெற்றோர்களைப் பேண் !
பிரியமாய்த் தொண்டுசெய்துன்-பெற்றோர்களைப்பேண்!

உற்ற குறைகள் நீக்கி உதவி செய்து
†உவப்பாய் வணங்கி உன்றன்—பெற்றோர்களைப்பேண்!

கற்ற குழந்தாய் ! கண்மணி யேநீ
கண்ணியமாய்ப் பேர்விளக்கிப்—பெற்றோர்களைப்பேண்!

குற்றம் உன்னால் அவர்க்குக் கொஞ்ச மேனும்
குறுகா வண்ணம் நடந்து—பெற்றோர்களைப் பேண் !

---

*குறிப்பு—*பேண—போற்றுவாயாக. † உவப்பு—மகிழ்ச்சி.*

## 3. தின்பண்டம்

*"பூசுவதும் வெண்ணீறு ! பூண்பதுவும் பொங்கரவம்"*
*என்ற மெட்டு*

1. தின்பண்டம் தாவென்று
தினந்தோறும் உன் தாயின்
முன்பு சென்றே அழு தழுது
முரட்டுத் தன் மையுடனே
துன்பு செய்து வருந்தாமல்
துள்ளியாடிப் படித்திடுவாய்
அன்புள்ள நற்குழந்தாய் !
அதுவே நன் முறையாகும்.

*** ***

2. எப்பொழுதும் தின்பண்டம்
இடைவிடாமல் தின்பதுவும்
தப்பாகும் என்பதைநீ
தான் அறிவாய், அதுவு மன்றித்
தப்பாமல் நோய் வந்து
தான் வாட்டும், பிறர் உன்னை
அப்பாகுண் டோதரா என்
றழைத்து மிகக் கேலி செய்வர்.

*** ***

3. அழுகலான பழங்களையும்,
அருவருக்கும் உணவினையும்
கழுகு போலக் கண்டபடிக்
கண்ணோநீ தின்னாதே
அழகிய உன் உடம்பிற்கே
அதிகநலம் தரத்தக்க
கொழுவிய தின் பண்டத்தைக்
குளிர்ச்சியுடன் தின்றிடுவாய்.



4. களைப்புற்ற நேரமதில்,
கடும்பசியால் மிகவாடி
இளைப்புற்ற நேரமதில்,
இனியதின்பண் டங்களையே
களிப்புற்றே அளவாகக்
கண்மணியே தின்றுமேநீ
அளப்பில்லா மகிழ்ச்சியினை
அடைந்துமிக வாழ்ந்திடுவாய்.

---

## 4. விளையாட்டு (உடற் பயிற்சி)

*"வாழ்க வாழ்கவே மன்னவன் வாழ்கவே" என்ற மெட்டு*

1. விளையாடி நீவா ! விளையாடி நீவா !
வேகமாக ஓடிக் கண்ணே விளையாடி நீவா !
வேர்க்க வேர்க்கவே விளையாடி வந்தால்
வேண்டிய தின் பண்டங்களை விரும்பித் தின்னலாம்.
விளையா டாமல்நீ வீணாய்த் தூங்கினால்
விறுவிறுப்பும் சுறு சுறுப்பும் விட்டு நீங்குமே
மூர்க்கத் தனமாக மோதி ஆடாமல்
முதல்தரமாய் ஆட்டங்களை முயன்றே ஆடிவா !

*** ***

2. காலையில் ஆடு ! மாலையில் ஆடு !
கடும் வெயிலில் ஆட்டத்தினைக் கட்டாயம் விடு !
வேலை நேரத்தில் விளையாடு வதற்கு
விருப்பம் சிறிதும் கொள்ளாமல்நீ வேலையைக் கவனி !
நூலைப் படிக்காமல் வேலை முடிக்காமல்
கோலி ஆடினால் எல்லோரும் கேலி செய்வார்கள்
சோலை மயிலைப்போல் சூழ்ந்துநீ கல்விச்
சாலை யினில் நன்கு படித்துச் சலியாமல் ஆடு !

3. வீட்டிலே சில ஆட்டம் ஆடலாம் ;
வெளியி லேயும் ஆட்டம் சில விரும்பி ஆடலாம்.
வீட்டிலே உடற் பயிற்சி செய்யலாம் ;
வேலையும் ஓர் ஆட்டமென்று விரைந்து செய்யலாம் ;
பாட்டுப் பாடியே நாட்டி யங்களைப்
பண்புடனே ஆடி ஆடிப் பழகிக் கொள்ளலாம்.
வீட்டை விட்டுமே வெளியிலே சென்று
விறுவிறுப்பாய்ப் பந்தும் பிறவும் விரும்பி ஆடலாம்.

* * *   * * *

4. நொந்து வருந்திடும் நோய் உள்ள போது
நோக நோக ஆடி அந்த நோயை வளர்க்காதே.
தந்து துன்பத்தைத் தவிக்கச் செய்கின்ற
தகுதி யில்லா ஆட்டங்களைத் தள்ளி நீக்குவாய்.
எந்த வயதிலும், எத்தொழில் செயினும்
ஏற்ற நல்ல ஆட்டங்களை இனிக்க ஆடுவாய்.
தொந்தியைக் கரைத்துத் தோலினை மினுக்கும்
அந்த நல்ல ஆட்டம் ஆடி அழகு பெற்றிடுவாய்.

---

## 5. எறும்பு (ஊக்கம்)

*"நிலா நிலா ஓடிவா நில்லாமல் ஓடிவா"* என்ற மெட்டு

1. சின்ன சின்ன எறும்பு ! சிங்கார எறும்பு !
உன்னைவிட ஊக்கத்தில் உயர்ந்த எறும்பு !
ஓயாமல் என்றும் உழைக்கும் எறும்பு !
சாயாமல் சென்று சாரையிடும் எறும்பு !
தண்ணீரைக் கண்டால் தவிக்கும் எறும்பு !
தொண்ணூறு வளைகள் தோண்டும் எறும்பு !
எங்கள் குழந்தாய் ! இந்த எறும்பு
பொங்கு மகிழ்வுடன் போவதைக் காண்பாய்.



2. எறும்பினைக் கண்டால் எப்போ தும்நீ
குறும்பு செய்யாமல் கூர்ந்து கவனி !
ஒருசிறு எறும்பும் உன்னைப் போலச்
சுறுசுறுப் பிழந்து சும்மா இராது.
சிற்றெறும் பென்றும் கொட்டெறும் பென்றும்
சிகப்பெறும் பென்றும் கறுப்பெறும் பென்றும்
எத்தனை யோவகை எறும்புகள் உண்டு
அத்தனை எறும்பும் அழகாய்ச் செல்லும்.

* * *   * * *

3. எறும்பின் குணத்தை எங்கள் குழந்தாய் !
விரும்பிநீ கற்க வேண்டும் ; கேள் அது,
சுறு சுறுப்புடன் சூழ்ந்தே அரிசியை
விறு விறுப்புடன் வேகமாய் இழுக்கும்
இழுத்துச் சென்று இனிய தன் வளையில்
அழுத்தி வைத்துப் பின் அடா மழையிலும்
மனக்குறை யின்றி மகிழ்வாய்ச் சாப்பிடும்
உனக்கும் அதுபோல் ஊக்கம் வேண்டும்.

* * *   * * *

4. எறும்பின் குணந்தான் இன்னொன் றுண்டு ;
விரும்பிக் கற்க வேண்டும் நீ கண்டு.
ஒன்றன் பின் ஒன்றாய் ஒற்றுமை கொண்டு
சென்றுதம் இடத்தைச் சேர்வதும் உண்டு ;
பலவும் சேர்ந்தே பண்டங்கள் தம்மைக்
கலைவில் லாமல் கவ்வியே செல்லும்.
அந்தநல் ஒற்றுமை 'அன்பே'! 'உனக்கும்
வந்துசேர் வதற்கு வழிசெய் வாயே.

# குழந்தைப் பாட்டு

## இரண்டாம் பகுதி

### 6. கல்வி

*‘நாதர் முடி மேலிருக்கும்’ ‘கண்மணியே’ என்ற மெட்டு*

1. கல்வியதனைக் கற்றிடுவாய் — கண்மணியே !
   கற்கண்டினும் சுவை அதிகம் — கண்மணியே !
   வெல்லத் தின்பண்டம் கல்வி — கண்மணியே !
   விரும்பிக் கற்றால் சுவைப்பாய் — கண்மணியே !
   செல்வம் என்பது கல்வி — கண்மணியே !
   சேர்ந்து கற்றால் உணர்வாய் — கண்மணியே !
   நல்ல நகைகள் கல்வி — கண்மணியே !
   நாடும் அழகு கல்வி — கண்மணியே !

* * *

2. என்றும் அழியாது கல்வி — கண்மணியே !
   எதற்கும் மேலானது — கண்மணியே !
   சென்ற இடங்கள் எல்லாம் — கண்மணியே !
   சிறப்பளிக்கும் கற்றோர்க்குக் — கண்மணியே !
   நின்ற துன்பம் நீக்கும் — கண்மணியே !
   நீண்ட இன்பம் ஆக்கும் — கண்மணியே !
   *பொன்றி இறந்த பின்னும் — கண்மணியே !
   புகழினை நிலைநிறுத்தும் — கண்மணியே !

* * *

3. கண்ணுடையவர் கற்றோர் — கண்மணியே !
   கல்லாதவர் குருடர் — கண்மணியே !

குறிப்பு—*பொன்றி இறந்தல்—இறந்தொழிதல்



புண் என்றே சொல்ல வேண்டும் — கண்மணியே
புகழ் கல்வி யிலார் கண்ணைக் — கண்மணியே !
திண்ணமுடன் கற்றவரே — கண்மணியே !
திகழ் மனிதர் ஆவார்கள் — கண்மணியே !
*வெண்மையாய்க் கல்லாதார் — கண்மணியே !
விலங்குகள் போலாவார் — கண்மணியே !

* * *

4. கலை உள்ள முதுமை — கண்மணியே !
   கல்விக்கு ஏற்ற நன்று — கண்மணியே !
   கலை யில்லா இளமை — கண்மணியே !
   கல்விக்கு ஏற்றதுவாம் — கண்மணியே !
   கலை வந்தால், கல்வி — கண்மணியே!
   கை கொடுத்துக் காப்பாற்றும் — கண்மணியே!
   கலை யில்லாமல் நீயும் — கண்மணியே !
   கருத்தாகக் கற்றிடுவாய் — கண்மணியே !

---

### 7. மெய்

*“வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே” என்ற பாரதியார் பாடலின் மெட்டு.*

1. பேசுக மெய்யினை ! பேசுக மெய்யினை !
   பேசுக மெய்யினையே !
   பெருமையும் புகழும் பெறவேண்டு மானால்
   பேசுக மெய்யினையே !
   மாசில்லாத மாணிக்கக் கனியே !
   மணியே ! நற் குழந்தாய் !
   மாபெரும் நன்மைகள் †மன்னவே மெய்யினை
   மகிழ்வாய்ப் பேசுகவே !

* * *

குறிப்பு—*வெண்மை—அறிவின்மை. †மன்ன—பொருந்த.

2. மெய்யே சுவதால் மிகப்பெருந் நிமைகள்
மேவிடு மானாலும்

மீண்டும் மீண்டும் மெய்யே சுதலே
மேன்மை தரும் கண்ணே !

பொய்யே சுவதால் பூமியும் பொருளும்
பொருந்திடு மானாலும்

பொல்லா தான பொய்யினைப் பேசுதல்
புன்மை தரும் கண்ணே !

*
** *
**

3. பொய் சொன்னோர்க்குப் போசனம் கிடைக்காது ;
புகழும் கிடைக்காது ;

பொல்லாத பெயரும், பொத்தென்று உதையும்
பொருந்தியே கிடைக்கும்.

மெய் சொலும் பிள்ளைக்கு மேலான பெயரும்,
மிட்டாயும் கிடைக்கும் ;

விதவிதமான வேட்டியும், பொருளும்
வேண்டிய படிக் கிடைக்கும்.

*
** *
**

4. நீ ஒரு பொய் சொன்னால் நிறையக் காசுகள்
தருவேன் என்றொருவர்

நீட்டிக் காசைக் காட்டி னாலும்
நீபொய் சொல்லாதே.

நீ மெய் சொன்னால் நெஞ்சைப் பிடித்து
நெரித்திடுவேன் என்று

நின்னை ஒருவர் மிரட்டினாலும்
நீ மெய் யே சொல்லு !



# 8. நன்னடக்கை

*"ஐயா ஒரு சேதி கேளும்"*
*என்ற நொண்டிச்சிந்து மெட்டு.*

1. பிள்ளையே நீ சொல்வதைக் கேள்—உனக்குப்
பிழை யின்றி நன்னடக்கை யும் வேண்டும்.

பள்ளிக் கூடம் போகும்போதும்—திரும்பப்
பள்ளிக் கூ டம்விட்டு வரும் போதும்

துள்ளித் துள்ளிக் குதித்து—வழியில்
துடுக்குக்கள் ஒன்றும்நீ செய்ய லாகாது.

பிள்ளை மிக நல்ல பிள்ளை—என்னும்
பேரெடுத்து நேராகப் போய் வருவாய்.

*
** *
**

2. பக்கத்துப் பையனிடம்—பொறாமைப்
படுவதும் சண்டையும் கூடாவாம்.

மிக்க பெருங் கோள் சொல்லி—வீணாய்
மேன்மை இழந்து நீ கெட்டிடாதே.

சுக்கலாய்ப் போகும்படி—எதையும்
சும்மாநீ உடைக்காதே, கிழிக்காதே.

தக்கநன் னடக்கையுடன்—பிள்ளாய் !
தவறாமல் நடந்திடின் புகழ்ச்சி உண்டாம்.

*
** *
**

3. தினந்தோறும் பள்ளி சென்று—பிள்ளாய் !
தெளிவாகப் படித்துமே தேற வேண்டும்.

மனம்போன போக்குப்படித்—திரிந்து
மணியான பின் செல்லக் கூடாது.

குணமுடன் ஆசிரியர்—சொல்லும்
கொள்கைகளைத் தட்டாமல் கொள்ளவேண்டும்.

பணங் காசைக் காட்டிலுமே நல்ல
பண்புள்ள நடக்கையே பெருமை தரும்.

***　　***

4. வெம்பி வருந்தும்படி—பிள்ளாய்!
வேறெந்த உயிரையும் துன்புறுத்தாதே.
தும்பிகளைப் பிடித்து—மிகவும்
தொந்தரவு படுத்திநீ வதைத்திடாதே
வம்புகள் செய்திடாதே—நாயின்
வாலை இழுத்தடித்து வருத்திடாதே.
நம்பி எல்லோரும் உன்னை—மெச்சி
நன்னடக்கை உள்ள பிள்ளை என்ன நடப்பாய்.

---

## 9. சுத்தம் (தூய்மை)

*"கல்லைக்கும் கற்றலைக்கும் கவிபாடுவதும் கவிதையே"*
*என்ற மெட்டு*

1. சுத்தமாய் இருந்திட்டால்தான்
சுகம் கிடைக்கும் கண்ணே!
சுத்தமில்லா விட்டால்நோய்கள் சூழ்ந்துமிக வாட்டும்.
நித்தமும் அதிகாலையில் நீஎழுதல் வேண்டும்.
நேரத்தோடு பல்துலக்கி நீராட வேண்டும்.
மெத்தவும் சோம்பேறியாய் மேல்குளிக்கா விட்டால்
மேலெல்லாம் கெட்டநாற்றம் மேவிமிக நாறும்.
சுத்தமாய்த் துணிகளைநீ தோய்த்துக் கட்ட வேண்டும்.
சுத்தந்தான் சோறுபோடும் சொன்னேன்
என் கண்ணே!

***　　***

2. தலையில்நல் லெண்ணெயினைத் தடவி நன்றாய்ச்சீவி
தகுதியுடன் பள்ளிக்கூடம் தான்செல்ல வேண்டும்.



கலையாமல் தலைமயிரைக் காக்கவேண்டும் கண்ணே
கந்தையானாலும் நன்றாகக் கசக்கிக்கட்டல் நன்று.
அலையாதே புழுதியினில்; ஆடாதே சேற்றில்;
அவ்விதம்நீ செய்வாயானால் அழுக்குமிகப் படியும்.
நிலையாகச் சுத்தமுடன் நீயிருக்கா விட்டால்
நீண்டநாள் இவ்வுலகில் நிலைக்க முடியாது.

***　　***

3. சுத்தமாம் காற்றுத்தான் சோர்வுதனைப் போக்கும்;
சுத்தமுள்ள சாப்பாடுதான் சுகந்தன்னை ஆக்கும்;
சுத்தமாம் தண்ணீரையே சுடவைத்துக் குடிப்பாய்!
சுத்தமாக இடங்களைநீ சோம்பாது வைப்பாய்;
எத்தனை தரம்சொன்னாலும் இம்மியும் கேளாமல்
எச்சிலைநீ கண்டகண்ட இடத்தில் துப்பாதே.
பித்துப் பிடித்தவன்போல், பிள்ளாய்! சுத்தத்தைப்
பெரிதாகக் கொள்ளாவிட்டால் பிழையாகும் அறிவாய்.

***　　***

4. உடம்பையும், உடையினையும், உணவு,காற்றுக்களையும்,
உள்ளஇடந் தனையும்சுத்தம் உடையதாக் குதல்போல்
சுடுஞ்சொல்லும் கடுஞ்சொல்லும் சூதும்வாதும்இன்றி
சுத்தமான சொற்களையே சொல்லிமிகப் பேசு!
கெடும்படி யாய்மனதில் கெட்டதெண்ணிப் பிறரைக்
கெடுக்காமல் சுத்தமான எண்ணங்களை எண்ணு!
கொடும்பிள்ளை என்னும்படிக் குற்றம்செயல்
வேண்டாம்.
குறைவில்லாச் சுத்தவாழ்வு கொண்டுநீ வாழ்வாய்!

---

## 10. தொண்டு (பணிவிடை)

"பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக் கசைத்து"
என்ற மெட்டு

1. தொண்டு செய்திடவே துணிவாய்என் கண்மணியே
கண்டால் ஆசானைக் கரங்கூப்பி, மிகப்பணிவு
கொண்டு தலைவணங்கிக், குறைவின்றிப்
பணிவிடைபாம்
தொண்டு செய்திடவே துணிவாய்என் கண்மணியே !

* *

2. வீட்டில் பெரியவரோ விருந்தாளி களோ வந்தால்
வாட்டம் இலாதெழுந்து வரவேற்று வணங்கிடு, பின்
ஓட்டம் எடுக்காமல் உயர்தொண்டு புரிந்தேநீ
காட்டுப் புறுப்போலக் களிப்புற்று வாழ்ந்திடுவாய் !

* *

3. ஊரில் எவர்க்கேனும் ஒருதுன்பம் உற்றிடினோ
ஆரா யிருந்தாலும் அதிவேக மாய்ச்சென்று
சோரா மல் அவர்க்குச் சுகம்தேடித் தருதலும்ஓர்
சீரார் தொண்டாகும் சிறுபிள்ளாய் நீயறிவாய் !

* *

4. உலகில் ஒருவருக்கும் ஒருதீங்கும் எண்ணமல்
உலக முழுமைக்கும் உயர்தொண்டு செய்துவாழ்ந்த
உலகம் புகழ்காந்தி, உயர்வள்ளுவர்,
ஏசுவைப்போல்
உலகம் புகழ நீயும் உயர்தொண்டு செய்துவாழ்வாய்!


வித்துவான். சுந்தர. சண்முகனார் எழுதியுள்ள

### பாட புத்தகங்கள் :

**திருக்குறள் தெளிவுரை—1. விலை அணா 4.**

குறிப்பிட்ட 50 திருக்குறளுக்கு, அதிகாரப்பெயரும், அதன் விளக்கமும், தெளிவான பதவுரையும், கருத்துரையும், எழுவாய் பயனிலைகளும், மாதிரிக் கேள்விகளும், மாணவருக் கேற்ப இனிய எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. இது உயர் நிலைப் பள்ளி முதல் பாரத்திற்கு உரியது.

**திருக்குறள் தெளிவுரை—2. விலை அணா 5.**

குறிப்பிட்ட 60 திருக்குறளுக்கு, முன்னைய நூல் போலவே, எல்லாம் இனிய எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. இது உயர்நிலைப் பள்ளி இரண்டாம் பாரத்திற்குரியது.

**ஆத்திசூடி அமிர்தம்—விலை அணா 5.**

(குழந்தைக் கதை மலர்) ஆத்திசூடியிலிருந்து, ஆரம்ப வகுப்புச் சிறுவர்களுக்கு மிகவும் ஏற்ற முப்பது வாக்கியங்களை எடுத்து, அவற்றிற்குப் பதவுரையும், அமிழ்தம் போன்ற நீதிக் கதையும், நீதியும் இனிய எளிய நடையில் எழுதியுள்ளார் ஆசிரியர். இது ஆரம்பச் சிறு வகுப்புக்களுக்கு உரியது.

**குழந்தைப் பாட்டு—விலை அணா 3.**

இந்நூலில், குழந்தைச் சிறுவருக்கு ஏற்ற இனிய எளிய 40 பாட்டுக்கள் மெட்டுக்களுடன் எழுதப்பட்டுள்ளன. இது ஆரம்பச் சிறுவகுப்புக்களுக்கு உரியது.

கிடைக்குமிடம் :

பைந்தமிழ்ப் பதிப்பகம்
61—பி, வைசியர் தெரு, புதுச்சேரி.
(புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்)